டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 20.02.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 200 - Madurai | Online Edition

# செயற்கை நுண்ணறிவு யுகத்தில் இந்திய இளைஞர்களுக்கான வாய்ப்புகள்

புது தில்லி, பிப்.19

இந்தியாவின் மக்கள் தொகை செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்ப மாற்றத்திற்கு உத்வேகத்தை அளிப்பதாக உள்ளது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 65 சதவீதம் பேர் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருப்பதால் டிஜிட்டல் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான உத்திசார் செயல்பாடுகளுக்கான மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது.

தேசிய அளவிலான முன்முயற்சிகள் வாயிலாகவும், நாடு முழுவதிலும் உள்ள பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், நவீன ஆராய்ச்சி படிப்புகள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களுடனான ஒத்துழைப்புகள் மூலம் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத் திறனை விரைவுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

இந்தியா செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின் கீழ், குறைந்த செலவில் அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கொள்கைகளை வடிவமைப்பதன் மூலம் சிறுநகரங்களிலும் புதுமை கண்டுபிடிப்புகள், தரவு மேலாண்மை உள்ளிட்ட பணிகளில் வாய்ப்புகளை அதிகரிக்கும்.

இளைஞர்கள் தலைமையிலான புதுமை கண்டுபிடிப்புகளுக்கான செயல்பாடுகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் உலக அளவிலான செயற்கை நுண்ணறிவின் தாக்கத்திற்கு ஏற்ப இந்தியாவை நிலைநிறுத்திக் கொள்ள உதவிடும்.

பொறுப்புணர்வுடன் கூடிய உள்ளடக்கிய பயன்பாட்டின் அடிப்படையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கும் இது வகை செய்கிறது.

# விதை ஆய்வு துணை இயக்குநர் குழு ஆய்வு

## ரூ.1.85 இலட்சம் மதிப்பிலான 322 கிலோ விதைகள் விற்பனைக்கு தடை!!



ஈரோடு, பிப்.19

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் வட்டார சுற்றுப் பகுதிகளில் உரிய விதிகளை பின்பற்றாது விதை விற்பனை நிலையங்களில் சுமார் ரூ.1.85 இலட்சம் மதிப்பிலான 328 கிலோ எடையிலான 5 விதைக்குவியல்களுக்கு விதை விற்பனைத் தடை விதிக்கப் பட்டது. ஈரோடு, விதை ஆய்வு துணை இயக்குநர் பெ.சுமதி தலைமையில் நடைபெற்ற குழு ஆய்வில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஈரோடு மாவட்ட பகுதிகளில் நடப்பு மாசி பட்டத்தில் நெல் அறுவடைக்குப் பின்னர் எள், மக்காச்சோளம், காய்கறி பயிர்கள் மற்றும் பருத்தி போன்றவை விவசாயிகள் பெரும்பாலும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றனர். சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தரமான விதைகளை உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சத்தி, பவானிசாகர் பகுதிகளில் உள்ள விதை விற்பனை நிலையங்களை விதை ஆய்வு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தலைமையில் விதை ஆய்வாளர்கள் ஈரோடு, பவானி, கோபி, சத்தி ஆகியோர் அடங்கிய குழு திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது விதை விற்பனை நிலைங்களில் பெறப்பட்ட விதைகளின் கொள்முதல் பட்டியல், விதைகள் இருப்பு பதிவேடு,

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

விதைகள் இருப்பு விவரப் பலகை, விதை விற்பனை உரிமம் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விற்பனை பட்டியல் குறித்து விவரம் சரிபார்க்கப்பட்டது. விதை விற்பனை பட்டியலில் பயிர், இரகம், நிலை குவியல் எண், காலாவதி நாள் விதை வாங்கும் விவசாயின் பெயர், ஊர், கைபேசி எண் குறிப்பிடப்பட்டு விவசாயின் கையொப்பம், விற்பனையாளரின் கையொப்பம் ஆகிய விவரங்கள் உள்ளதா என ஆய்வு செய்தனர். மேலும், விதை பாக்கெட்டுகளை உடைத்து விற்பனை செய்யப்பட்டு உள்ளதா மற்றும் அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தனர்.

உண்மை நிலை விதைக்குவியல்களின் இரகங்கள் தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல் படும் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் பதிவுச் சான்றிதழ் பெறப்பட்டு இருக்க வேண்டும். முளைப்புத்திறன் பரிசோதனை முடிவு அறிக்கையில் தேர்ச்சி பெற்றுள்ள விதைகளை மட்டுமே விவசாயிகளுக்கு விற்பனை செய்வது உறுதி செய்யப்பட வேண்டும். மேலே குறிப்பிடப் பட்டுள்ள நடைமுறைகளுக்கு மீறினால் விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவற்றின் கீழ் விதை விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விதை ஆய்வு துணை இயக்குநர், ஈரோடு தெரிவித்தார்.






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உழவரை தேடி வேளாண்மை திட்டத்தின் கீழ் நடந்த விவசாய கூட்டம்



நாமக்கல், பிப்.19

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை தொகுதி, புதுப்பட்டி கிராமத்தில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில் உழவரை தேடி வேளாண்மை திட்டத்தின் கீழ் நடந்த விவசாய கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மற்றும் நாமக்கல் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி எம்.எல்.ஏ. எம்.மதிவேந்தன், நடமாடும் மண் மற்றும் பாசன நீர் ஆய்வு முகாமை தொடங்கி வைத்தார்.

பின்னர் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவி களின் கல்வி வளர்ச்சி பற்றி உரையாடினார். மேலும் மாணவிகள் வேளாண் விவசாயிகளுக்கு எவ்வாறு மண் மாதிரிகள் மண் ஆய்-விற்காக வேளாண் நிலங்களில் சேகரிக்க வேண்டும், நிலத்தை ஜிக் ஜாக் வடிவ பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும். பயிர் வகையைப் பொறுத்து மாதிரி எடுக்கும் ஆழம் மாறுபடும். நெல் மற்றும் சிறுதானியங் களுக்கு 15 செ.மீ. (அரை அடி), கரும்பு, வாழைக்கு 30 செ.மீ. (ஒரு அடி) ஆழம் வரை மண் எடுக்கப்பட வேண்டும்.மண் வெட்டி, துளைப்பான் (Auger) ஆகியவற்றைப் பயன்படுத்தி நிலத்தில் 15 முதல் 30 செ.மீ ஆழம்முடைய 'V' வடிவப் பள்ளம் தோண்டி மண் மாதிரி எடுக்கக்கபட வேண்டும். எடுக்கப்பட்ட மண்ணை ஒரு பிளாஸ்டிக் வாளியில் போட்டு, நன்கு கலக்கவும். பின்பு நன்கு கலக்கப்பட்ட மண்ணைப் பரப்பி, நான்கு பகுதிகளாகப் பிரிக்கவும், எதிர் எதிர் பகுதிகளில் உள்ள மண்ணை நீக்கிவிட்டு, மீதமுள்ள மண்ணை மீண்டும் நன்கு கலந்து, அரை கிலோ (1/2 kg) அளவு வரும் வரை இந்தச் செயல்முறையைத் திரும்பவும் செய்ய வேண்டும். துணி பை அல்லது பாலித்தீன் பையில் மண் மாதிரியை நிரப்பி, அதில் விவசாயி பெயர், இடம், சர்வே எண், முந்தைய பயிர் போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு மண் பரிசோதனை நிலையத் திற்கு எடுத்து செல்ல வேண்டும் என்பதையும் மாணவிகள் விரிவாக விளக்கினார்.

# மக்காச்சோள பண்ணைப்பள்ளி பயிற்சி நடைபெற்றது



திண்டுக்கல், பிப்.19

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் மாங்கரை கிராமத்தில் மக்காச்சோள பண்ணைப் பள்ளி விவசாயிகள் பயிற்சி மூன்றாவது வகுப்பு நடைபெற்றது. இப்பயிற்சி வேளாண்மை துணை இயக்குநர் ரமேஷ், உழவர் பயிற்சி நிலையம் தலைமையில் ரெட்டியார்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி முன்னிலையில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் சீனிவாசன், மக்காச்சோள பயிர்களில் பூச்சி நோய் தாக்குதல் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பம் பற்றி கூறி விதை கடினப்படுத்துதல் நீர் சேமிப்பு மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயி களுக்கு எடுத்து கூறினார். மற்றும் இதில் மண் பரிசோதனை அதற்கு ஏற்றவாறு உரமிடுதல் என பயிற்சி நான்கு வகுப்புகளில் விரிவாக நடைபெறும் என கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் மூர்த்தி பண்ணைப்பள்ளி திடலுக்கு விவசாயிகளை அழைத்து சென்று மக்காச்சோள பயிர் பற்றியும் அதனை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குறைந்த வாடகைக்கு வைத்து நல்ல விலை கிடைக்கும் போது விற்று பயன்பெறலாம் என கூறினார். தோட்டக்கலை உதவி அலுவலர் ராஜா, வீட்டு தோட்டம் அமைத்து பயன்பெறலாம் என கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நெல் சாகுபடியில் புகையான் தாக்குதலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

# வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்



திருச்சி, பிப்.19

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரத்தில் நெல் சாகுபடியில் புகையான் பூச்சி தாக்குதல் சில பகுதிகளில் காணப்படுகிறது. இதனால் மகசூல் இழப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா கேட்டுக் கொண்டார்.

**அறிகுறிகள்**

- தண்டு அடிப்பகுதியில் பூச்சிகள் கூட்டமாக காணப்படும்.
- இலைகள் மஞ்சள் நிறமாக மாறி பின்னர் காய்ந்து விடும்.
- வயலில் வட்ட வடிவமாக பயிர்கள் உலர்ந்து காணப்படும்.
- பயிர் வளர்ச்சி குறைதல்.

**கட்டுப்பாட்டு முறைகள்**

- வயலில் நீர் தேங்காமல் வடிகால் அமைக்க வேண்டும்.
- அதிக நைட்ரஜன் உரம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.
- வேப்பெண்ணெய் போன்ற உயிரியல் மருந்துகள் பயன் படுத்தலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

● தாக்குதல் அதிகமாயின் பரிந்துரைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை இமிடா குளோ பிரிட் 17.8% SL 05 முதல் 1 மில்லி / 1 லிட்டர் நீரில் அல்லது இமிடா குளோ பிரிட் 17.8% SL 05 மில்லி உடன் அசிபேட் 75% SP 1 கிராம் / 1 லிட்டர் நீரில் அல்லது ட்ரைப்ளூ மெசோபைரிம் 10% SC / 94 மில்லி ஏக்கர் அல்லது ட்ரைப்ளூ மெசோபைரிம் 20% WG 125 கிராம் ஏக்கருக்கு ஏதேனும் ஒன்றை தண்டு அடிப்பகுதியில் தெளிக்க வேண்டும்.

● மருந்து தெளிக்கும் முன் வயல் நீரை வடிக்க வேண்டும். விவசாயிகள் வயல் கண்காணிப்பு மேற்கொண்டு ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்தி மகசூல் இழப்பை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



# விவசாயிகளுக்கு காளான் சாகுபடி குறித்து செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, பிப்.19

செட்டிநாடு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள், தங்களின் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, கிராமப்புற விவசாயிகளுக்காக காளான் சாகுபடி குறித்த செய்முறை விளக்க நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய காளான் சாகுபடியை விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதாகும்.

காளான் என்பது பூஞ்சை இனத்தைச் சேர்ந்த ஒரு உணவுப் பொருளாகும். இது பச்சை தாவரங்களைப் போல இலை, வேர், தண்டு இல்லாதது. காளான்கள் சூரிய ஒளியை பயன்படுத்தி உணவு தயாரிக்காது; மாறாக, சிதைந்த கரிமப் பொருட்களில் இருந்து தேவையான ஊட்டச்சத்துகளைப் பெறுகின்றன.

காளான் புரதம், வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நார்ச்சத்து நிறைந்த ஒரு மிகுந்த சத்தான உணவாக கருதப்படுகிறது. கொழுப்பு மற்றும் கலோரி குறைவாக இருப்பதால், இதயம், சர்க்கரை நோயாளிகள் மற்றும் உடல் நலனில் கவனம் செலுத்துவோருக்கு ஏற்ற உணவாக உள்ளது.

**காளான்களின் வளர்ச்சி முறை**

காளான்கள் விதை மூலம் அல்ல; ஸ்பான் (Spawn) எனப்படும் பூஞ்சை விதை போன்ற நுண்ணுயிர்களின் மூலம் வளர்கின்றன. முதலில் ஸ்பான், சாகுபடி ஊடகத்தில் (substrate) வளர்ந்து, மைசீலியம் (Mycelium) எனப்படும் வெள்ளை நிற நுண்தந்துக்களை உருவாக்குகிறது.

பின்னர் உகந்த வெப்ப நிலை, ஈரப்பதம் கிடைத்தவுடன் காளான் குலைகள் தோன்றி, சில நாட்களில் அறுவடைக்குத் தயாராகின்றன. இந்நிகழ்ச்சியில், மாணவிகள் விவசாயிகளுக்கு சிப்பிக் காளான் சாகுபடி முறையை விரிவாக விளக்கினர்.

**சாகுபடி முறை**

நெல் வைக்கோலை சிறு துண்டுகளாக வெட்டி, 6-8 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பின்னர் அதை சுத்தமாக வடித்து, பாலிதீன் பைகளில் அடுக்கடுக்காக நிரப்ப வேண்டும். ஒவ்வொரு அடுக்குக்கும் ஸ்பான் தூவ வேண்டும். பைகளில் சிறிய துளைகள் போட்டு, காற்றோட்டம் உள்ள இடத்தில் தொங்கவிட வேண்டும். தினமும் தண்ணீர் தெளித்து ஈரப்பதம் பராமரிக்க வேண்டும்.

**காளான் வளர்ப்புக்கு**

நேரடி சூரிய ஒளி தேவையில்லை, நல்ல காற்றோட்டம் அவசியம்.

**அதிக மகசூல் பெற**

தரமான ஸ்பான் பயன்படுத்துதல், சுத்தமான மற்றும் நோய் கிருமி இல்லாத சூழ்நிலை, சரியான ஈரப்பதம் மற்றும் வெப்ப நிலை பராமரிப்பு பழைய, பூஞ்சை பாதிக்கப்பட்ட பைகளை அகற்றுதல் போன்றவற்றை பின்பற்ற வேண்டும்.

ஒரு கிலோ வைக்கோலிலிருந்து சுமார் 800 கிராம் முதல் 1 கிலோ வரை காளான் மகசூல் பெற முடியும். ஒரு பையை 2-3 முறை அறுவடை செய்யலாம்.

இந்த செய்முறை விளக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், காளான் சாகுபடி குறித்த சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

குறைந்த இடம், குறைந்த முதலீடு மற்றும் விரைவான வருமானம் கிடைப்பது காரணமாக, பல விவசாயிகள் இந்த முறையை தங்கள் இல்லங்களில் தொடங்க ஆர்வம் தெரிவித் தனர்.

இது கிராமப்புறங்களில் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கி, இந்த காளான் வளர்ப்பு முறைகள் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மஞ்சள் ஒட்டுப் பொறி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.19


பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயி களுக்கு செயல்விளக்கம் மூலம் மஞ்சள் ஒட்டுப் பொறி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மஞ்சள் ஒட்டுப் பொறி (Yellow Sticky Trap) என்பது பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பறக்கும் பூச்சிகளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான உயிரியல் பூச்சி மேலாண்மை முறையாகும். இது மஞ்சள் நிற பிளாஸ்டிக் அல்லது கார்டு தகடாக இருந்து அதன் மேற்பரப்பில் ஒட்டும் பசை பூசப்பட்டிருக்கும்.

மஞ்சள் நிறம் வெள்ளை ஈ, திரிப்ஸ், ஆஃபிட், இலைத் துளையான் போன்ற பூச்சிகளை ஈர்க்கும் தன்மை கொண்டது. இந்த பூச்சிகள் தகடில் வந்து உட்காரும் போது ஒட்டும் பசையில் சிக்கி இறந்து விடுகின்றன. இதனால் பூச்சிகளின் எண்ணிக்கை குறைந்து பயிர் பாதுகாப்பு அதிகரிக்கிறது.

மேலும், இது பூச்சி மருந்துகளின் பயன்பாட்டை குறைத்து சுற்றுச்சூழலுக்கும் மனிதர்களுக்கும் பாதுகாப்பான முறை யாகும். பொதுவாக 1 ஏக்கருக்கு 10 முதல் 15 மஞ்சள் ஒட்டுப் பொறிகளை பயிரின் உயரத்திற்கு சமமாக கம்பியில் கட்டி பயன்படுத்த வேண்டும்.

இது ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையில் மிகவும் பயனுள்ள மற்றும் குறைந்த செலவிலான ஒரு கருவி-யாகும்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# செறிவூட்டப்பட்ட அரிசி - ஒரு பார்வை



மத்திய அரசு ரேசன் கடைகளில் செறிவூட்டப்பட்ட அரிசி (FORTIFIED RICE) வினியோகிக்கும் திட்டத்தை 2023 யில் தொடங்கப்பட்டு இன்று வரை வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அது என்ன செறிவூட்டப்பட்ட அரிசி என்பதை விரிவாக பார்ப்போம்.

**செறிவூட்டப்பட்ட அரிசி என்றால் என்ன?**

அரிசியில் இரும்பு சத்து, போலிக் அமிலம், வைட்டமின் பி 12, உள்ளிட்டவைகள் சேர்க்கப்பட்டு மாவாக அரைத்து, குருணைகளாக மாற்றி செறிவூட்டப்பட்ட அரிசியாக (100 கிலோ அரிசியில் ஒரு கிலோ ஊட்டசத்து கலவை அரிசி கலந்து) மாற்றப்படுகிறது. இந்த மூட்டைகளில் (+F) என்ற லோகோ அடையாளமாக எழுதப்பட்டு இருக்கும். பாலிஷ் செய்யப்பட்ட அரிசி மாவில் சத்துகள் கலந்து (EXTRUSION) தொழில்நுட்ப முறையில் அரிசி குருணைகளாக மாற்றப்பட்டு கலக்கப் படுகிறது.

**இதனுடைய பயன்கள்**

1) இதனை உண்பவர்களுக்கு ரத்த சோகை ஏற்படாமல் தடுக்கப்படும்.

2) வைட்டமின்கள் குறைபாடு உள்ளவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

3) கர்ப்பிணி தாய்மார்களுக்கு தேவைபடும் போலிக் அமிலம் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு இந்த அரிசி ரேசன் கடை வாயிலாக வினியோகம் செய்யப்படுகிறது. இதை பயன்படுத்திட மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது.

அது என்னவென்றால் இதனை சமையலுக்கு பயன்படுத்தும் போது அரிசியை நீரில் களையும் போது செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் தண்ணீரில் மிதக்கும், அதனை தவறாக பிளாஸ்டிக் அரிசி என்று கருதி வீணாக்கி விடுகிறார்கள். அதை தவிர்க்க வேண்டும். அப்படியே வீணாக் காமல் களைந்த அரிசியை சமைக்க வேண்டும். மத்திய அரிசி அதிக நிதி செலவழித்து செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குகிறது. இதை மக்கள் தவறாக பயன்படுத்தி ஆடு, மாடுகளுக்கு கொடுப்பது தவறான தாகும். இதை கஞ்சியாக கொடுத்தால் மலட்டு தன்மை அசிடிடி ஏற்படும். மனித நுகர்வுக்கு மட்டுமே பயன்படுத்திட வேண்டும்.

இனி மேலாவது ரேசன் கடையில் வினியோகப்படும் செறி வூட்டப்பட்ட அரிசியை வாங்கி பயன்படுத்திட வேண்டும். செறி வூட்டப்பட்ட அரிசி நம்முடைய ஆரோக்கியத்திற்கு ஏற்றதாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# RAWE திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விளக்கக் கூட்டம்



திருச்சி, பிப்.19

டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் ஒரு பகுதியாக பூவாளூரில் இன்று விவசாயிகளுக்கு பயனுள்ள தொழில்நுட்ப விளக்கக் கூட்டத்தை நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் இலை வண்ண அட்டை (Leaf Colour Chart), மஞ்சள் நிற ஒட்டும் பொறி (Yellow Sticky Trap) போன்றவை குறித்து நேரடி கள விளக்கம் வழங்கப்பட்டது. இலை நிற அட்டையின் மூலம் நெற்பயிரில் நைட்ரஜன் உர தேவையை சரியாக கணிக்கலாம் என்பதையும், மஞ்சள் நிற ஒட்டும் பொறி மூலம் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் என்பதையும், விவசாயிகளுக்கு மாணவர்கள் எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சி மூலம் விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து, தங்கள் விளைச்சலை உயர்த்துவதற்கான வழிமுறைகளை புரிந்துகொண்டனர்.

# நெல் வயலில் ட்ரோன் தொழில்நுட்பம் பரப்புரை செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



மதுரை, பிப்.19

மதுரை வேளாண்மை கல்லூரியின் செல்லம்பட்டி RAWE குழுவைச் சேர்ந்த 4ஆம் ஆண்டு மாணவர்கள், நெல் வயலில் ட்ரோன் மூலம் பூச்சிக்கொல்லி தெளிக்கும் நவீன வேளாண்மை தொழில்நுட்பத்தை நேரில் பார்வையிட்டு, அதன் பயன்பாட்டை விவசாயிகளுக்கு பரப்புரை செய்தனர்.

பயிற்சி பெற்ற ட்ரோன் இயக்குநர், ட்ரோனின் செயல்முறை, GPS வழிநடத்தல் அமைப்பு, தெளிப்பு முறை, பேட்டரி திறன், ஒரு ஏக்கருக்கு தேவையான நேரம் மற்றும் செலவு போன்ற விவரங்களை விளக்கினார். ட்ரோன் மூலம் சமமான தெளிப்பு, மருந்து வீணாக்கம் குறைதல், தொழிலாளர் பற்றாக்குறைக்கு தீர்வு, உடல் நல பாதுகாப்பு ஆகிய பல நன்மைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

RAWE மாணவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, ட்ரோன் தொழில்நுட்பத்தின் பயன்கள் மற்றும் துல்லிய வேளாண்மையின் அவசியத்தை விளக்கினர். இந்த நிகழ்வின் மூலம் நவீன வேளாண்மை தொழில்நுட்பம் விவசாயி களிடம் பரவச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் 4ஆம் ஆண்டு மாணவர்கள் B. Gomathi, P. Gowsalya, K.M. Harini, M. Harini, M Harini,V. Harshitha, V. Indhumathi, M. Jeevadarshini மற்றும் S. Jeevika ஆகியோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப பரப்புரையில் ஈடுபட்டனர்.

இந்த செயற்பாடு மாணவர்களுக்கு செயல்முறை அறிவை வழங்கியதுடன், விவசாயிகளுக்கும் நவீன தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

# நெல் விதைத் தேர்வுக்கான முட்டை மிதவை முறை செயல்விளக்கக் காட்சி நடத்திய வேளாண்மை கல்லூரி மாணவன்!

மதுரை, பிப்.19

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே உள்ள பள்ளப்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர் ச.கமலேஷ், ஊரக





வேளாண் பணி அனுபவத் திட்டம் கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு, பயிர் விளைச்சலை உயர்த்துவதில் தரமான விதைத் தேர்வு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதை விவசாயி களுக்கு எளிய முறையில் விளக்கு வதற்காக, நெல் பயிரில் விதைத் தேர்விற்கான முட்டை மிதவை முறை (Egg Floatation Method) குறித்து செயல் விளக்கக் காட்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், முதலில் நெல் விதைத் தேர்வின் அவசியம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. தரமற்ற மற்றும் முழுமையாக வளர்ச்சி அடையாத விதைகள் பயன்படுத்தப்படும் போது முளைப்பு வீதம் குறைவதும், செடி வளர்ச்சி சீராக இல்லாததும், விளைச்சல் பாதிக்கப்படுவதும் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

பின்னர், ஒரு தண்ணீர் நிரப்பிய பாத்திரத்தில் ஒரு கோழி முட்டை விடப்பட்டது. அதன்பின் தண்ணீரில் உப்பு சேர்த்து கலக்கப்பட்டது. முட்டை தண்ணீரில் மிதக்கும் நிலைக்கு வந்தபோது, அதுவே சரி யான உப்பு கரைசல் அடர்த்தி என விவசாயிகளுக்கு காட்டப்பட்டது. அதன் பிறகு நெல் விதைகள் அந்த உப்பு கரைசலில் விடப்பட்டன.

இந்த முறையில், மிதக்கும் விதைகள் வெற்றிடமுள்ளவை அல்லது தரமற்றவை என்பதால் அவை நீக்கப்பட்டன. அடியில் மூழ்கிய விதைகள் நிறைவானதும், ஆரோக்கியமானதும் ஆக இருப்பதால் அவற்றைத் தேர்வு செய்து விதைப்பதற்காக பயன் படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது. பின்னர் தேர்வு செய்யப்பட்ட விதைகளை சுத்தமான தண்ணீரால் 2-3 முறை கழுவி, நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும் என்பதும் விளக்கப்பட்டது.

இந்த செயல் விளக்கக் காட்சியின் போது, விவசாயிகள் நேரடியாக செயல்முறையை பார்த்து புரிந்துகொண்டனர். இந்த முறை மிகவும் எளிதானதும், குறைந்த செலவில் வீட்டிலேயே செய்யக்கூடியதும் என்பதால், அனைவரும் இதை நடைமுறையில் பின்பற்ற உறுதி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சி மூலம் நெல் விதைத் தேர்வில் அறிவியல் முறையைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. இதுபோன்ற தொழில்நுட்ப வழிகாட்டல்கள் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வாழையில் கொத்து ஊட்டச்சத்து வழங்கும் முறையினை விளக்கிய வேளாண்மை மாணவிகள்



கரூர், பிப்.19

கரூர் மாவட்டம், வெண்ணை மலை வட்டாரத்தில் நடைபெற்று வரும் கிராமப்புற வேளாண்மை அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் வாழைப்பயிரில் மீன் அமினோ அமிலம் மற்றும் தண்ணீர் பயன்படுத்தி கொத்து ஊட்டச்சத்து வழங்கும் முறையை விளக்கக் காட்சியாக நடத்தினர்.

வாழையில் மொட்டு வெளிவந்த பின் உருவாகும் கொத்துக்கு தேவையான முக்கிய ஊட்டச்சத்துகளை நேரடியாக வழங்கும் நடைமுறையே கொத்து ஊட்டமாகும். இந்த முறையால் பழங்களின் வளர்ச்சி மேம்பட்டு, அளவு, எடை மற்றும் மொத்த மகசூல் அதிகரிக்கிறது. கடைசி 'கை' திறந்த பின் ஆண் மொட்டு (வாழைப்பூ) அகற்றப்பட்டு, மீன் அமினோ அமிலம் கலந்து தயாரிக்கப்பட்ட கரைசல் வெட்டுப்பகுதியில் ஊட்டப்படுகிறது. பின்னர் அந்த பகுதி பாலித்தீன் பையைப் பயன்படுத்தி மூடப்படுகிறது. இதனால் கரைசல் வீணாகாமல், வளர்ந்து வரும் பழங்களுக்கு நேரடியாகச் சென்று சேருகிறது.

## பயன்கள்

இந்த முறையைப் பயன்படுத்துவதன் மூலம் பழங்களின் நீளமும் பருமனும் அதிகரிக்கிறது, கொத்து எடையும் மகசூலும் உயர்கிறது. பழங்களின் தரமும் ஒரே மாதிரித் தன்மையும் மேம்படுகிறது. மண்ணில் உரம் இடும் முறையுடன் ஒப்பிடுகையில் ஊட்டச்சத்து இழப்பு குறைவாக இருக்கும்.

மேலும், செலவுக் குறைவானதும் திறன் மிக்கதுமான ஊட்ட மேலாண்மை முறையாக இது விளங்குகிறது. எளிதாக கடைப்பிடிக்கக்கூடிய இந்த கொத்து ஊட்ட முறை, வளர்ந்து வரும் பழங்களுக்கு நேரடி சத்தளிப்பை வழங்குவதால், அதிக மகசூலும் உயர்தரமான விளைபொருளும் பெற உதவுகிறது என மாணவிகள் விளக்கினர்.

# அசோபாஸ் கொண்டு நெல் நாற்று வேர் நனைத்தல் செயல்முறை விளக்கம்



மதுரை, பிப்.19

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவர்கள் மேற்கொண்டு வரும் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மேலூர் வட்டாரம், தெற்குத்தெரு கிராமத்தில் நெல் சாகுபடி தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமில், வேளாண் இறுதி ஆண்டு மாணவர் சந்தோஷ், நெல் பயிரில் உரச் செலவைக் குறைத்து மகசூலை அதிகரிக்கும் ‘அசோபாஸ்‘ (Azophos) உயிர் உரம் கொண்டு நாற்று வேர் நனைத்தல் குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல்முறை விளக்கம் அளித்தார்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

**அசோபாஸ் பயன்கள் :** அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஆகிய நுண்ணுயிர்கள் கலந்த இந்த ’அசோபாஸ்’, காற்றில் உள்ள தழைச்சத்தை நிலைநிறுத்தவும், மண்ணில் கரைக்கப்படாத நிலையில் உள்ள மணிச்சத்தை வேர்களுக்கு எளிதாகக் கிடைக்கவும் உதவுகிறது.

**செய்முறை :** 5 சென்ட் நிலத்திற்குத் தேவையான நாற்று களுக்கு, 1 கிலோ அசோபாஸ் உரத்தை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசலாகத் தயாரிக்க வேண்டும். பிடுங்கப்பட்ட நாற்று களின் வேர்களை இந்தக் கரைசலில் 15 முதல் 30 நிமிடங்கள் வரை நனைத்து வைத்துப் பின்னர் நட்டுவிட வேண்டும்.

**நன்மைகள் :** இம்முறை மூலம் 25% வரை ரசாயன உரச் செலவைக் குறைக்கலாம். பயிர்களின் வேர் வளர்ச்சி சீராக இருப்பதுடன், தூர் கட்டும் திறனும் அதிகரிக்கிறது.

நெல் சாகுபடியில் செலவைக் குறைக்கும் இந்த உயிர் உரத் தொழில்நுட்பத்தைப் பற்றித் தெரிந்துகொண்ட தெற்குத்தெரு கிராம விவசாயிகள், மாணவரின் இந்த முயற்சியை பாராட்டினர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வாழை பயிரில் மகசூல் உயர்விற்கான சிகிச்சை மற்றும் செயல்விளக்கப் பயிற்சி



தேனி, பிப்.19

தேனி மாவட்டம், வடவீர நாயக்கன்பட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த மித்ரா, கிராமப்புற வேளாண் பணிப் பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ் வாழை பயிரில் மகசூலை அதிகரிக்க பாஸ்போபாக்டீரியா மூலம் வாழைக்கன்று சிகிச்சை குறித்து செயல்விளக்கப் பயிற்சி நடத்தினார்.

இந்தப் பயிற்சியில், வாழைக்கன்றுகளை நடுவதற்கு முன் பாஸ்போபாக்டீரியா கரைசலில் ஊறவைக்கும் முறை, பரிந்துரைக் கப்பட்ட அளவு, சிகிச்சை நேரம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கப்பட்டது. பாஸ்போபாக்டீரியா பயன்பாட்டின் மூலம் மண்ணில் உள்ள பாஸ்பரஸ் சத்துக்கள் பயிர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்து, வேர் வளர்ச்சி, தண்டு வளர்ச்சி மற்றும் மகசூல் உயர்வில் கிடைக்கும் நன்மைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் செயல்விளக்கத்தை ஆர்வத்துடன் கவனித்து, தங்களின் சந்தேகங்களை கேட்டறிந்து விளக்கம் பெற்றனர். இந்தப் பயிற்சி, ரசாயன உர பயன்பாட்டை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற உயிரியல் முறைகள் மூலம் வாழை சாகுபடியில் நிலையான உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.

# பருத்தியில் பூச்சி மேலாண்மை பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள் விளக்கம்

நாமக்கல், பிப்.19

நாமக்கல் மாவட்டத்தில், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் கிராமப்புற விவசாயிகளுடன் நேரில் சந்தித்து களப்பயிற்சி நடத்தி வருகின்றனர். பயிற்சியில், எலச்சிப் பாளையம் பகுதியில் உள்ள பருத்தி விவசாயிகளை சந்தித்து, பிங்க் போல்வாம் கட்டுப்பாட்டிற்கு Gossyplure 4% RTU phero mone paste பயன்படுத்தும் முறையை விவரமாக விளக்கினர்.



இந்த pheromone paste, பூச்சிகளை ஈர்க்கும் தன்மை கொண்டது. பூச்சிகள் அந்த paste நோக்கி செல்லும்போது, அவர்களின் வாழ்வியல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகிறது. இதனால் பருத்தி துளிகள் (bolls) சேதமடையாமல் காப்பாற்ற முடிகிறது.

**பயன்கள்**

- பூச்சிகளை குறைக்கும்
- ராசாயன பயன்பாடு குறைக்கப்படும்
- சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு
- பருத்தி விளைச்சல் அதிகரிக்கும்

விவசாயிகள் இதன் மூலம் குறைந்த செலவில், இயற்கை முறையில் பிங்க் காய்ப்புழுகளை கட்டுப்படுத்தி, அதிக விளைச்சல் பெற முடியும்,

# கொத்தவரை பயிரைத் தாக்கும் சாம்பல் நோயை கட்டுப்படுத்தும் முறையை எடுத்துரைத்த வேளாண் மாணவர்



மதுரை, பிப்.19

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையை சேர்ந்த நான்காம் ஆண்டு படிக்கும் மாணவன் வே.சிவஹரி கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டதின் கீழ் ஒரு பகுதியாக, கொத்தவரை பயிரைத் தாக்கும் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம் பயன்படுத்துவது குறித்து வேளாண் மாணவர் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் வீதம் கந்தகம் கலந்து தெளிப்பதன் மூலம் பூஞ்சாணத் தாக்குதலைத் தடுத்து மகசூலை உறுதி செய்யலாம் என அவர் தெரிவித்தார். இதில் அப்பகுதி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

# வேப்பெண்ணெய் கரைசல் பற்றி விவசாயிகளுக்கு வேளாண் மாணவர்கள் விளக்கம்



நாமக்கல், பிப்.19

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள், தங்களது கிராமப்புற அனுபவப் பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக அகரம் கிராம விவசாயிகளை சந்தித்து வேப்பெண்ணெயின் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, இரசாயன மருந்துகளுக்கு மாற்றாக பாதுகாப்பான வழிகளை பயன்படுத்த வேண்டிய அவசியத்தை விளக்கினர்.

வேப்பமர விதைகளில் இருந்து பெறப்படும் வேப்பெண்ணெய், இயற்கை பூச்சிக்கொல்லியாக ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறையில் முக்கிய இடம் பெறுகிறது. இது பூச்சிகளை உடனடியாக கொல்லாமல், அவற்றின் உணவு உட்கொள்ளும் திறனை குறைத்து, வளர்ச்சி மற்றும் இனப்பெருக்கத்தை தடுக்கிறது. சுருள் பூச்சி, வெள்ளை ஈ, திரிப்ஸ், ஜாஸிட் போன்ற பல்வேறு பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் இது பயனுள்ளதாக உள்ளது.

மிளகாய், பருத்தி, தக்காளி, வெண்டை, தேங்காய் உள்ளிட்ட காய்கறி மற்றும் தோட்டக்கலை பயிர்களில் வேப்பெண்ணெயை பாதுகாப்பாக பயன்படுத்தலாம். மேலும் இலை மஞ்சள், மில்டியூ, கருப்பு புள்ளி போன்ற பூஞ்சை நோய்களின் தாக்கத்தையும் குறைக்க உதவுகிறது. மண் வழியாக வரும் நெமாடோடு தாக்கத்தையும் கட்டுப்படுத்தும் தன்மை இதற்கு உள்ளது.

பயன்படுத்தும் முறையில் 0.5% முதல் 1% வரை கரைசல் தயாரித்து இலை தெளிப்பாக பயன்படுத்தலாம். 5 முதல் 10 மில்லி வேப்பெண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து, சிறிதளவு திரவ சோப்பு சேர்த்து காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். விதை சிகிச்சை மற்றும் மண் பயன்பாட்டிலும் இது சிறந்த பலன் அளிக்கிறது.

சுற்றுச்சூழல் நட்பு, மனிதர் மற்றும் கால்நடைகளுக்கு பாதுகாப்பானது, மீண்டும் தாக்கம் வராமல் தடுக்க உதவுவது போன்ற பல நன்மைகள் வேப்பெண்ணெய்க்கு உள்ளன. இந்த விழிப்புணர்வு நிகழ்வின் மூலம் மாணவர்கள், இயற்கை முறைகளை அதிகமாக பயன்படுத்தி நில வளத்தையும் விவசாய லாபத்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

# இயற்கை விவசாயியை சந்தித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் கலந்துரையாடல்

நாமக்கல், பிப்.19

நாமக்கல் மாவட்டம், PGP கல்லூரி மாணவர்கள் மல்ல சமுத்திரம் பகுதியில் செயல்பட்டு வரும் இயற்கை விவசாயியை நேரில் சந்தித்து, இயற்கை விவசாய முறைகள் குறித்து பயில்வதற்கான கல்வி சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.






இந்த நிகழ்வில் மாணவர்கள், மண் வள மேம்பாடு, பசளி தயாரிப்பு, பசும் பயிர் சாகுபடி, பசுந்தழை உரம், பசுமை பூச்சிக்கொல்லிகள் தயாரித்தல் போன்ற நடைமுறை முறைகளை விவசாயியிட மிருந்து நேரடியாக கற்றுக்கொண்டனர். குறிப்பாக, ஜீவாமிர்தம், பஞ்சகவ்யம், காய்ச்சல் முறையில் தயாரிக்கப்படும் உயிர் உரங்கள் ஆகியவற்றின் பயன்கள் மற்றும் பயன்பாட்டு முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

விவசாயி தனது வயலில் ரசாயன உரங்களை தவிர்த்து, இயற்கை வளங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெறும் முறைகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். மண் பரிசோதனை, நீர் மேலாண்மை, இடைவெளி பராமரிப்பு போன்ற தொழில்நுட்ப அம்சங்களும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்த பயணத்தின் மூலம் மாணவர்கள் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தையும், நிலையான வேளாண் வளர்ச்சிக்கான அவசியத்தையும் புரிந்துகொண்டனர். மேலும், விவசாயிகளுடன் நேரடி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் அனுபவங்களை அறிந்து கொள்வது, எதிர்கால வேளாண் நிபுணர்களாக உருவாக அவர்களுக்கு பெரிதும் உதவும் எனக் கூறப்பட்டது.

இந்நிகழ்ச்சி மல்லசமுத்திரம் பகுதியில் விவசாயிகள் மற்றும் மாணவர்கள் இடையேயான அறிவுப் பரிமாற்றத்தை வலுப்படுத்திய தாக பாராட்டப்பட்டது.

# பஞ்சகவ்யா - செயல் விளக்கமளித்த வேளாண் மாணவிகள்



கிருஷ்ணகிரி, பிப்.19

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவிகள், ஊரக தோட்டக்கலைப் பணி அனுபவம் (RHWE) திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, வாணியம்பாடி பகுதியில் உள்ள ரத்னம் மற்றும் அழகேசனின் வயலில் பஞ்சகவ்யா (Panchakavya) பயன்பாடு குறித்து நேரடி காட்சி விளக்கம் நடத்தப்பட்டது.

பஞ்சகவ்யா என்பது மாட்டுச்சாணம், மாட்டு மூத்திரம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பசு சார்ந்த பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இயற்கை வளர்ச்சி ஊக்கி ஆகும். இது பயிர்களின் வளர்ச்சியை தூண்டி, பூக்கும் திறனை அதிகரித்து, மகசூலை மேம்படுத்த உதவுகிறது.

# தென்னையில் ருகோஸ் ஸ்பைரலிங் வைட் ஃப்ளை கட்டுப்பாட்டிற்கு மஞ்சள் ஒட்டுப் பொறி செய்முறை விளக்கம்



மதுரை, பிப்.19

வீ.மீனாட்சிபுரம் பகுதியில் தென்னை பயிரில் அதிக சேதம் விளைவிக்கும் Rugose Spiraling Whitefly பூச்சியை கட்டுப்படுத்துவதற்காக, மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் செய்முறை விளக்கப் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை அந்தக் கல்லூரியின் மாணவி பூஜா நடத்தினார். இந்த நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு, ருகோஸ் ஸ்பைரலிங் வைட் ஃப்ளையின் அறிகுறிகள், அதன் வாழ்நிலைச் சுழற்சி மற்றும் அது தென்னை மரங்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து விளக்கப்பட்டது.

குறிப்பாக, இப்பூச்சியை ஆரம்ப நிலையிலேயே கண்காணித்து கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டுப் பொறி (Yellow Sticky Trap) பயன்படுத்துவது மிகவும் பயனுள்ள தாக இருப்பதை செய்முறை விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும், மஞ்சள் ஒட்டுப் பொறியை எவ்வாறு தயாரிப்பது, எத்தனை பொறிகள் வைக்க வேண்டும், எங்கு வைக்க வேண்டும், எப்போது மாற்ற வேண்டும் என்பதையும் நேரடியாக செய்து காட்டினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**